**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 67/2012**

Deposition of **<u> PW.1 </u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 05.02.2026 in accordance with the provision of Act 1 of 1873.

Name : ராஜேந்திரன் Father's Name : அழகப்பன்

துவக்க நேரம்: 04.58 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> :

1. என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் மேற்குபுறத்தில் தாவா வண்டிப்பாதை இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் அதுபோல் வண்டிப்பாதை அங்கு இல்லை. ஓடையின் கிழபுறத்தில்தான் பாதை உள்ளது. ஆணையர் வரைப்படத்தின்படி எனது வீட்டின் கிழபுறத்தில் பாதை உள்ளதா என்றால் இல்லை, அதுபோல் பாதை இல்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. எனது தகப்பனார் காலத்திலிருந்தே வாதி, பிரதிவாதிகளாகிய எங்களுக்கு பாத்தியப்பட்ட அனைத்து சொத்திற்கும் ஒரே கிணறும், ஒரு மோட்டார் செட்டும்தான் உள்ளது என்றால் சரிதான். அந்த மோட்டார் 5 எச்பி மின்மோட்டார் என்றால் சரிதான். எனது தந்தை காலத்திலிருந்து எங்களது நிலங்களுக்கு மேற்படி கிணறு மற்றும் மின் மோட்டார் மூலம்தான் நீர்பாசனம் செய்வோம் என்றால் சரிதான். மேற்படி கிணற்றிலிருந்து கொட்டாய் வரை சிமெண்ட்பைப் போடப்பட்டுள்ளது என்றால் எங்கள் பாகத்தில் இல்லை பிரதிவாதியின் பாகத்தில் வரைதான் போடப்பட்டுள்ளது. மேற்படி பைப்பை பிரதிவாதி போட்டாரா என்றால் இல்லை, எனது அப்பா காலத்தில் போடப்பட்டுள்ளது.

3. நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் 2 வீடுகளுக்கு இடையே தொட்டியும், மின் கம்பமும் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட தொட்டியின் நீர் நிலத்தில்தான் விவசாயம், கால்நடை, வீடுகளுக்கு நீர் எடுத்துக்கொள்வோம் என்றால் அந்த தொட்டி பிரதிவாதியின் பாகத்தில் உள்ளது. மேற்படி சிறிய தொட்டியை தவிர வேறு எதுவும் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். தாவா தாக்கல் செய்த பின்னிட்டு எனது பாகத்தில் குளியல் அறையும், தொட்டியும் கட்டினேன் என்றால் சரிதான்.

4. நீதிமன்ற ஆணையரின் முதல்நிலை வரைபடத்தின் வண்டிப்பாதையாக குறிப்பிட்டுள்ள நிலத்தில் வழக்கிற்கு பின்னிட்டு வேண்டுமென்றே குளியல் அறையும், தொட்டியும் கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல, எனது நிலத்தில்தான் கட்டியுள்ளேன். ஏத்தாப்பூரிலிருந்து தும்பல் கிராமத்திற்கு செல்லும் தார் ரோட்டிலிருந்து கிழக்கு நோக்கி கொட்டாய் வரை செல்லும் பாதையை ஆக்கிரமிப்பு செய்து குளியல் அறையும், நீர்த்தொட்டியும் அமைத்துள்ளேன் என்றால் சரியல்ல, அங்கு பாதை இல்லை. அவ்வாறு பாதையை ஆக்கிரமிப்பு செய்வதற்காக பிரதிவாதி என்மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றாலும் அவ்வாறு புகார் கொடுக்கப்பட்டு நான் ஆக்கிரமிப்பை அகற்ற கொள்வதற்காக காவல் நிலையத்தில் தெரிவித்துவிட்டு இன்றுவரை அந்த ஆக்கிரமிப்பை அகற்றாமல் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல.

5. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையும், வரைபடமும் பற்றி விவரங்கள் தெரிந்துருந்தும் வேண்டுமென்றே தெரியாது என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, ச.எண்.272/1-ல் எந்த தடமும் ச.எண்.274/1 லிருந்து 247/5 வரை உள்ள நிலங்களில் தடம் உள்ளதை ஆணையர் குறிப்பிட்டுள்ளது மட்டும் சரியானது. நான் சொல்வது தவறு என்றாலும் நீதிமன்ற ஆணையர் அறிக்கை எனக்கு விரோதமாக அமைந்துள்ளது என்பதால் அதனால் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. எனது தந்தை இருந்த காலத்தில் எங்கள் நிலத்தில் மஞ்சள், நெல், மரவள்ளி கிழங்கு பயிர் செய்வோம் என்றால் சரிதான். எனது தந்தை காலத்தில் கொட்டாய் அருகே உள்ள நிலங்கள் 5 வயல்களாக இருந்ததா என்றால் இல்லை, 3 வயல்கள்தான் இருந்தது. எனது நிலத்திற்கு வடபுறம் 60 அடி அகலத்தில் ஓடை அமைந்துள்ளது என்றால் இல்லை, சுமார் 20 அடி அகல ஓடைதான் உள்ளது. எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே கடந்த 20.02.1997-ல் பாகப்பிரிவினை ஏற்படுத்தியது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் எந்தெந்த சர்வே எண்கள் வழியாக என்ன அளவுகளில் பாதை அமைந்துள்ளது என காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் பத்திரத்தில் வண்டி, வாகனங்கள், கால்நடை போகவர வழிநடை காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், அளவுகள் குறிப்பிடப்படவில்லை.

7. பாகப்பிரிவினைப்பத்திரத்தில் பாதையின் அளவுகள் குறிப்பிடாத பாதை அமைத்துக்கொண்டோம் என்றால் பாகப்பிரிவினை செய்த அதே ஆண்டிலேயே சர்வேயர் மூலம் பாதை போட்டுக்கொண்டோம். எந்தெந்த சர்வே எண்கள் வழியாக பாதை போ்டுக்கொண்டோம் என்றால் ச.எண்.275/1-லிருந்து ச.எண். 275/4 வரை பாதை போட்டுக்கொண்டோம். அதற்கான ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி பாதை புலவரைப்படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால இல்லை, அந்த பாதையை பிரதிவாதிகள் மறைத்துவிட்டார்கள். எத்தனை செண்ட் பாதை போடப்பட்டுள்ளது என்றால் தலா 6 செண்ட் ஒதுக்கி 12 செண்ட் அளவில் பாதை போடப்பட்டுள்ளது.

8. கடந்த 1997-ல் பாதை போடப்பட்டதாக கூறும்பட்சத்தில் எனது வழக்குரையில் சுமார் 40 வருடங்களாக பாதை உள்ளதாக கூறியுள்ளது சரியா, தவறா என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு 15 வருடங்களுக்கு முன்பு பாதை போட்டுக்கொண்டோம். 40 வருடம் என கூறியுள்ளது தவறு என்றால் எனக்கு தெரியாது. எனவே நான் உண்மைக்கு மாறான சங்கதிகளுடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் வழக்கை தள்ளுபடி

செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த பொதுதடமும் இல்லை என்றால் சரியல்ல. (பிரதிவாதிகள் தரப்பில் பொதுபாதை உள்ளதாக கூறி பதிலுரை தாக்கல் செய்துவிட்டு தற்போது மேற்கண்டவாறு கேட்க இயலாது என்று வாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது). சட்டப்படி 1-ம் பிரதிவாதியின் நிலத்தில் வழித்தடம் கேட்க எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

9. வா.த.சா.ஆ.2-ல் எனது நிலத்தின் வடபுறத்தில் ஓடை இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் மாமூல் வழிதட குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதுபோல் தடம் அங்கு இல்லை. மேற்படி பத்திரத்தில் கண்டுள்ள வாசகங்கள் தவறான வாசகங்களா என்றால் பத்திரம் எழுதியவருக்குதான் அதுபற்றி தெரியும். மேற்படி தடம் ஓடைக்கு தெற்கு பகுதியில் உள்ள தடம் என்றால் இல்லை அதுபோன்று தடம் அங்கு இல்லை. வா.த.சா.ஆ.4-ஆனது எனக்கும், பிரதிவாதிக்கும் கூட்டாக உள்ளது என்றால் சரிதான். வா.த.சா.ஆ.6-ஆன அடங்கல் எங்கள் இருவருக்கும் கூட்டாக உள்ளது என்றால் சரிதான்.

10. வா.சத.சா.ஆ-8, 9 ஆவணங்களில் தடம் பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனது தந்தை காலத்திலேயே பூர்வீக சொத்து இருந்தது என்றால் சரிதான். அவ்வாறு பூர்வீக சொத்தான 2 ஏக்கர் 23 செண்டில் ஒரு பகுதியில் எனது தந்தையின் பூர்வீக சொத்து என்றாலும் மற்றொரு பகுதி எனது தாயாருக்கும் பூர்வீக சொத்து என்றால் சரிதான். எனக்கும், பிரதிவாதிக்கும் எந்த மாதம் பிரச்சினை ஏற்பட்டது என்றால் கடந்த 2012-ஆம் ஆண்டு பிரச்சினை ஏற்பட்டது. தேதி, மாதம் தெரியவில்லை. இந்த வழக்கில் வழக்குமூலம் என்றைக்கு ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியவில்லை என்றாலும் 1-ம் பிரதிவாதி சொத்தில் எனக்கு பாதை கோர உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. சட்டப்படி ஒருவர் மற்றொரு சொத்தில் உரிமை கோர முடியாது என்றால்

பாகப்பிரிவினையின்படி கேட்கிறேன். எனவே நான் தாக்கல் செய்த இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

முடிவு நேரம்: 06.00 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No. 67/2012, Dt.05.02.2026.